RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256 irjt22s853

# வில்லுப்பாட்டு மரபின் தொன்மையும் அமைப்பியலும்

அ. இஸ்பா [அ, *]

[அ] தமிழ்த்துறை, மகாலட்சுமி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பருத்திப்பட்டு, ஆவடி, சென்னை-600071, தமிழ்நாடு, இந்தியா

# Antiquity and Structuralism in the Tradition of Villuppaattu (Musical Storytelling)

A. Isbha [a, *]

[a] Department of Tamil, Mahalashmi Women's College of Arts and Science, Paruthippattu, Avadi, Chennai-600071, Tamil Nadu, India

* Corresponding Author:
Kaviyaazhinee@gmail.com

Received: 30-04-2021
Revised: 02-06-2022
Accepted: 09-06-2022
Published: 20-08-2022

Check for updates

## ABSTRACT

The art form of villupattu is one of the oldest forms of folk liturgy and is known to have originated from the times when it lived as a hunting community. It can be seen that Villuppaattu was also significant among the art forms performed in the characteristics of cultural life. It should be noted that Villuppaattu later took the initiative of social reform beyond the nature of entertainment. In the run-up to the completion of the worship at the temple festivsals, the artists begin the villuppaattu performance. This art is performed not by a single person but by a small group of organized individuals with a variety of musical instruments. This art form is executed in such a way that at the height of the story, their leadership excellence prevails by narrating the life events of the protagonist or the heroine, such as the preservation, the recitation of the meaning of the word, the singing of the guru, modesty on the public stage, the resources of the country, or the scene of Kailash, the life of the male protagonist or the female protagonist. In this system, the system of the continuation of the story is also used. That is to say, the narrative of continuing the story refers to the tendency to continue the story of the first day's event into the event the next day. In particular, the narratives of Villuppaattu sing not only the deity but also the specialties of their own country. Such a singing category is called "Swadeshi Stories." It is noteworthy that it is these Swadeshi stories that direct the audience to a cultured state. The singing of minor deities also plays an important role in the structuralism of the Villuppaattu in the manuscripts sung through copies of the same. Not only this, but there is also the tradition of singing the stories that are loved. On the basis of this, the independent nature of this art form is known. The concluding part of the structuralism of Villupattu is to thank God for the excellent completion of the Villuppattu. Not only this, but one of the peculiarities of this art is that the tradition of thanking all those who have contributed to this event is also situated in Mangalam (Conclusion), which is not different from this art form, but is a part of this art form. This study shows that the existence and development of this art form of Villuppaattu are due to the assimilation of changes in content and form from time to time.

**Keywords:** Villuppaattu, Mangalam, Musical Storytelling, Musical Instrument

## முன்னுரை

நாட்டுப்புற மக்களிடையே நிகழ்த்தப்படும் கலைகள் நாட்டுப்புறக் கலைகளாகும். நாட்டுப்புறக் கலைகளுள் வேட்டைக்கால சமுதாயத்தில் தோன்றிய கலையே வில்லுப்பாட்டு ஆகும். வேலை

ஓய்வின் போது மக்கள் பொழுதுபோக்காக பயன்படுத்திய இசையுடன் கூடிய பாடலே வில்லுப்பாட்டாக வளர்ச்சியடைந்த, தனித்தொரு இசை கலையாக நின்று நிலைத்தது எனலாம். நாட்டுப்புறக் கதைப்பாடல்களில் வில்லுப் பாட்டு ஒரு சிறந்த கலை வடிவமாக இன்றும் திகழ்கிறது. சிறுதெய்வ வழிபாட்டுக் கோயில்களில் நடைபெறும் கொடை விழாக்களின் போது வில்லுப்பாட்டு பாடப்படுகிறது. வில்லுப்பாட்டு வில்லிசைக் கலைஞனுக்கும், இறைவனுக்கும் இடையே உள்ள உறவை எடுத்துக் காட்டும் விதத்தில் அமைகிறது. வில்லுப்பாட்டின் மூலமாக வில்லிசைக் கலைஞன், மனித உடலுக்குத் தெய்வத்தைக் கொண்டு வரவேண்டும். அதுவே இந்து கோயில்களில் பாடும் வில்லிசைக் கலைஞனுக்குத் தனிச்சிறப்பைக் கொடுக்கும். மேலும் வில்லுப்பாட்டு இந்துக் கோயில் களிலும், கத்தோலிக்க ஆலயங்களிலும் மற்றும் பொது நிகழ்ச்சிகளிலும் பாடப்படுகிறது. இத்தகைய வில்லுப்பாட்டு கடவுள் வணக்கத்துடன் தொடக்கம் பெறும். மங்களத்துடன் முற்றுப்பெறும்.

## வில்லுப்பாட்டு நிகழ்த்த வாய்ப்புக் கிடைsத்தல்

கோயில்களில் வில்லுப்பாட்டு நிகழ்ச்சி நிகழ்த்த, வாய்ப்பானது மக்கள் செல்வாக்குப் பெற்ற வில்லுப்பாட்டுக் கலைஞரின் இருப்பிடம் தேடியே வருகிறது. கொடைநாளினை ஊர்ப் பெரியவர்கள் குறித்ததும், முதலில் வில்லுப்பாட்டுக் கலைஞரை சந்தித்து, முன் பணமும் கொடுத்து, வில்லுப்பாட்டு நிகழ்ச்சி நடத்துவதற்கு அழைப்பு விடுக்கின்றனர். மக்கள் செல்வாக்குப் பெறாத வில்லுப்பாட்டுக் கலைஞர்கள், கொடை விழாக்கள் நடைபெறும் சமயங்களில், தாங்களாகவே சென்று வில்லுப்பாட்டு நிகழ்ச்சி நிகழ்வதற்கு வாய்ப்புக் கேட்கின்றனர்.

## நிகழ்ச்சி துவங்கும் முறை

கோயில் நிர்வாகத்தினரால் வில்லுப்பாட்டிற்கெனத் தனியாகப் பொது மேடை என்று கோயில் நடைக்கு எதிர்ப்புறமாக அமைத்துக் கொடுக்கப்படும். அத்தகைய மேடையில் பிள்ளையார்ப் படுக்கை வைத்து, இசைக் கருவிகளுக்குப் பூசைச்செய்து வில்லுப்பாட்டுக் கலைஞர்கள் வில்லுப்பாட்டை நிகழ்த்துவர்.

## பிள்ளையார்ப் படுக்கை

வில்லுப்பாட்டு நிகழ்ச்சித் துவங்குவதற்கு முன்பாக, வில்லுப் பாட்டிற்கென அமைக்கப்பட்ட மேடையின் வலப்பக்கத்தில் சாணம் அல்லது சந்தனத்தால் பிள்ளையார் உருவம் செய்து வைப்பர். பிள்ளையார் உருவத்தை செய்து வைப்பது கோயில் நிர்வாகமே ஆகும். இத்தகையப் பிள்ளையார் உருவம் முன் நிறை நாழி நெல், பழம், பன்னீர் சூடம், சாம்பிராணி, பத்தி, வெற்றிலை, அருகம்புல், நிறை விளக்கு (எண்ணெய் முழுவதும் நிரம்பிய விளக்கு) இவற்றை வைத்து, வில்லுப்பாட்டுத் தலைமைப் பாடகர் படுக்கைச் (வழிபாடு) செய்வார். இதனையே 'பிள்ளையார்ப் படுக்கை' என்று அழைக்கின்றனர். பிள்ளையார்ப் படுக்கை முற்றிலும் வில்லுப்பாட்டுக் கலைஞர்கள் மட்டும் செய்கின்ற பூசையாகும்.

## இசைக் கருவிகளுக்குப் பூசை

வில்லுப்பாட்டுக் கலைஞர்கள் பிள்ளையார்ப் படுக்கைச் செய்து முடித்தபின்பு வில், குடம், கட்டை, உடுக்கை, தபேலா, வீசு கோல், தாளம், ஜால்ரா, ஆர்மோனியம் போன்ற இசைக்கருவிகளை வைத்து பூசைச் செய்வர். அதன்பின்னர் வில்லை வளைத்து நாண் ஏற்றுவர். வில் வளைக்கும்போது உடைந்தால் தீங்கு நேரும் என கருதுகின்றனர். எனவே வில்லுக்கு நாணேற்றும் முன்னர், தூயத் தீபம் காட்டி, தீபாராதனைச் செய்கின்றனர். வில்லுப்பாட்டுக் கலைஞர்கள் தங்கள் கருவியை தட்டி சரி செய்த பின்னர்தான் பாடத் துவங்குவர்.

## வில்லுப்பாட்டு நிகழ்த்தக் கால அளவு

கோயில்களில் வில்லுப்பாட்டு நிகழ்ச்சி நிகழ்த்த கால அளவு அதிகமாகவே காணப்படுகிறது. பெண் தெய்வக் கோயில்களில் வில்லுப் பாட்டானது, பகற்பொழுது தொடங்கி நள்ளிரவு வரை பாடப்படுகிறது. ஆண் தெய்வக் கோயில்களில் பொழுது சாயும் நேரம் தொடங்கி யாமப்பொழுது நிறைவடையும் வரை பாடப்படுகிறது. சில சமயங்களில் மழை காரணமாக வெகு சீக்கிரமே இந்நிகழ்ச்சி நிறைவு பெறும் வழக்கமும் உண்டு. இதற்கு கால அளவு அதிகமாகக் காணப்பட்டாலும் தெய்வ மேறுதல் நிகழ்ச்சி முடியும் வரை தான் சிறப்பாகக் கருதப்பெறும். அதன் பின்னர் வில்லுப்பாட்டுக் கலைஞர்கள் மக்களின் விருப்பத்திற்கிணங்கப் பாடிக்கொண்டிருப்பர்.

## கொடைவிழா

கொடை விழா என்பது ஒரு சடங்கு ஆகும். இவ்விழாவில் தான் வில்லுப்பாட்டு நிகழ்த்தப்படும். வில்லுப்பாட்டுத் தெய்வங்களுக் கென்றேக் கோயில்களில், வில்லுப்பாட்டு நிகழ்த்தப்படுகிறது. வில்லுப் பாட்டு கோயில்களில் பெரும்பாலும் சிறு தெய்வங்களின் சிலை ஒன்றும் பலிபீடமும் காணப்படும். ஆனால் கொடை விழா காலங்களில் கோயில் களில் 21 பீடங்கள் காணப்படும். 21 பீடங்கள் அமைத்துக் கொள்வதன் நோக்கம் இதுவரை யாருக்கும் தெரியவில்லை. ஆனால் வழிவழியாக மக்கள் இப்படி செய்வதால் இன்றும் வழக்கில் இருந்து கொண்டிருக்கிறது. கொடை விழாவிற்குரிய நாளை தீர்மானித்த பின், ஊரினர் ஒவ்வொரு வரும் தத்தம் பங்கினைக் கொடுத்து, கொடை விழா நடத்துவர். கொடைவிழா பெரும்பாலும் கார்த்திகை மாதம் தொடங்கி சித்திரை மாதம் வரை நடைபெறும்.

## விழாக்களின் முக்கியத்துவம்

கொடை விழாக்கள் ஆண், பெண் தெய்வங்களுக்கு என்று, தனித் தனியானக் கிழமைகளில் நடைபெறும். இத்தகையக் கொடை விழாக்கள் பெண் தெய்வக் கோயில்களில் செவ்வாய்க் கிழமைகளிலும், ஆண் தெய்வக் கோயில்களில் வெள்ளிக்கிழமைகளிலும் நடைபெறும். அதாவது பெண் தெய்வக் கோயில்களில், திங்கட்கிழமை கொடை விழாத் தொடங்கி புதன்கிழமை முடிவுபெறும். ஆண் தெய்வக் கோயில்களில், வியாழன் துவங்கி சனிக்கிழமையன்று கொடை விழா நிறைவு பெறும். ஆனால் இவ்வாறு 'தெய்வங்களுக்கு வெவ்வேறு கிழமைகளில் கொடை விழா கொண்டாடுவதன் காரணத்தை யாராலும் திட்டமாகக் கூற முடிய வில்லை. வழிவழியாக எல்லோரும் இப்படி கொண்டாடி வரு வதால் நாங்களும் கொடை விழாவை இந்த கிழமைகளிலேயேக் கொண்டாடி வருகின்றோம்'(நேர்க்காணல்: ரத்தினசபை, கோயில் அர்ச்சகர், பூவியூர்) என்ற பதிலேயே கூறுகின்றனர்.

## பலியிடுதல்

கொடை விழாக்களில் நடைபெறும் விளக்கு வழிபாட்டோடு பலியிடுதலும் நடைபெறுகிறது. கொடை விழாவில் ஆண், பெண் தெய்வக் கோவில்கள் என்ற பாகுபாடு இல்லாது எல்லா கோயில்களிலும் பலியிடுதல் நடைபெறுகிறது. மேலும் இவ்விழாக்களில் ஆண் விலங்கு களை மட்டும்தான் பலி செலுத்துவர். இதற்கான காரணம் சரிவரத் தெரிய வில்லை. பெரும்பாலும் ஆட்டுக்கடாக்களும், சேவல் கோழிகளும், பன்றிகளும் பலியிடப்படும். இதன்பின்னரே வில்லுப்பாட்டு நிகழ்ச்சி நடைபெறும்.

## விளக்கு வழிபாடு

கோயில் திருவிழாக்களில் விளக்கு வழிபாடு முக்கியமானதாகும். இந்த விளக்கு வழிபாடு பெண்களால் மட்டுமே நடத்தப்படுகிறது. மேலும் விளக்கு வழிபாடு என்பது தெய்வத்தை நினைத்து கன்னிப் பெண்கள் நல்ல கணவன் கிடைக்க வேண்டும் என்றும், மாங்கல்யம் நிலைக்க வேண்டும்

என்றும், நாடு நலம் பெற வேண்டும் என்றும் வழிபாடு செய்வர். மேலும் விளக்கின் சுடர் தெளிவாக எரிந்தால் வேண்டுதல்களும் தெளிவாக நிறைவேறும்' (நேர்க்காணல்: வெள்ளையன், வில்லுப்பாட்டு ஆர்வலர், ராஜாவூர்) என மக்கள் கருதுகின்றனர். எல்லா கோயில்களிலும் காணப்படுகின்ற பெண் தெய்வங்களுக்கு விளக்கு வழிபாடு நடைபெறும். ஆனால் இத்தகைய விளக்கு வழிபாட்டில் ஆண் தெய்வங்களைப் பற்றியும், பாட்டுகள் பாடப்படும். திருவிழா இல்லாத சமயங்களிலும் விளக்கு வழிபாடானது, தமிழ் மாதத்தின் ஒவ்வொரு கடைசி செவ்வாய்க்கிழமையன்றும் நடைபெறும். வேண்டுதல் செய்வோர் நெய் விளக்கு, எலுமிச்சை விளக்கு, மாவிளக்கு போன்றவற்றை கோயில்களில் விளக்கேற்றி வைத்து வழிபடுவர். இத்தகைய விளக்கு வழிபாடு நன்மையை தரும் என்பதை உணர்த்தும் படியாகவும், இவ்வழிபாட்டை நிறைவு செய்யும் படியாகவும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சித் தொடங்கப்படும்.

## வில்லுப்பாடல் பாடும் முறை

வில்லுப்பாட்டுப் புலவரே தலைமைப்பாடகர். இதில் புலவர் பாடுகின்ற முறையும், வீசுகோலை வீசிச்சுழற்றி, வில் நாணை அடிக்கின்ற பாங்கும், அவர் தம் அங்க அசைவுகளும், கேட்போரைக் கவரும். வில்லின் இடப்புறம் புலவர் கம்பீரமாக அமர்ந்திருப்பார். வலப்புறம் குடமடிப்பவர் அமர்ந்திருப்பார். பின்புறத்தில் ஏனையோர் அமர்ந்திருப்பர்.

புலவர் 'தந்தனத்தோம் என்று சொல்லியே, வில்லினில் பாட' என்று தொடங்கி கணபதி, கலைமகள் போன்ற தெய்வங்களை வழிபடுவார். 'தந்தனத்தோம்' என்ற சந்தமே வில்லுப்பாட்டின் இசையாகும்.

ஒருவகையில் இந்நிகழ்ச்சியை அரிகதைச் சொல்லும் பாகவதர்களின் நிகழ்ச்சியோடு ஒப்பிட்டுக் கூறலாம். எப்படி பாகவதர் உரையும், பாட்டுமாகத் தம் கதையை நடத்திச் செல்கிறாரோ, அந்த வகையில் தான் நிகழ்ச்சிகளைப் பாடலாகவும், இடையிடையே தொடர்புக்காகக் கதைச் சொல்லும் முறையில் உரைகளும் இடம்பெறும்' என்று ஈனமுத்துப் பாண்டியன் கதையில் மு. சண்முகம் பிள்ளை குறிப்பிடுகின்றார். வில்லுப்பாடல் பாடும் முறையை ஒரு பாடல் அடி இவ்வாறு கூறுகின்றது.

"வில்லடிக்க குடமடிக்க

வீரமணி ஓசை பாட"

இதில் வில், குடம், மணி, உடுக்கை அத்தனையும் சேர்ந்து ஒலிப்பது, வில்லுப்பாட்டு சுவைஞர்களுக்கு மிகுந்த இன்பத்தைத் தரும் (Shanmugasundaram, 2007).

## மேடையமைப்பு

வில்லுப்பாட்டு நிகழ்ச்சித் தொடங்கும் முன் கோயில்களில் உள்ள விழா மேடையிலோ அல்லது கோயில் நிர்வாகத்தினரால் எழுப்பப்பட்ட பந்தல் மேடையிலோ தான் வில்லுப்பாட்டு நடைபெறும். வில்லுப் பாட்டுக் கலைஞர்கள் மேடையின் தரையில் விரித்திருக்கும் ஜமுக்காள விரிப்பின் மேல் இடப்பக்கமாக அமர்ந்திருப்பர். இவர்கள் அமர்வதற் கென்று மேடையில் ஆசனங்கள் போட்டிருக்க மாட்டார்கள். வில்லுப்பாட்டு நிகழ்ச்சி மேடையானது, செவ்வக வடிவில் அமைந்தி ருக்கும். வலப்பக்கத்தின் ஒரு பகுதியில் பிள்ளையார் உருவம் அமைந்து இருக்கும். மேடையின் முன் திரைசீலைப் போடப்பட்டிருக்கும். அக்காலத்தில் வில்லுப்பாட்டுக் கலைஞர்கள், சத்தமாக பாட வேண்டியக் கட்டாயம் இருந்தது. ஆனால் இப்போது ஒலிபெருக்கி இருப்பதால், வில்லுப்பாட்டுக் கலைஞர்கள் வில்லுப்பாட்டை நிகழ்த்துவதில் சிரமம் அடைவதில்லை. ஒலிவாங்கியானது வில்லிசைப் புலவர் பக்கத்திலும், பின்பாட்டுக்காரர் ஒருவரின் பக்கத்திலும், உடுக்கை அல்லது குடம் வாசிப்பவரின் பக்கத்திலுமாக மூன்று ஒலிவாங்கி அமைந்திருக்கும். பின்னர் நிகழ்ச்சி ஆரம்பிக்கும் போது, திரைசீலை விலக்கப்பட்டு, வில்லுப்பாட்டு நிகழ்த்தப்படும்.

## வில்லுப்பாட்டின் அமைப்பு முறை

தமிழகத்தின் தென் மாவட்டங்களில் நிகழ்த்தப்படும் வில்லுப் பாட்டு பல்வேறு அமைப்புகளைத் தன்னகத்தே கொண்டு சிறப்புறத் திகழ்கின்றது. இருப்பினும் வில்லுப்பாட்டு ஒரு பொதுவான அமைப்பின் கீழ் செயல்படுவதைக் காணலாம். தி.சி. கோமதிநாயகம் அமைப்பு முறையை

1. காப்புவிருத்தம்
2. வருபொருள் உரைத்தல்
3. குருவடி பாடுதல்
4. அவையடக்கம்
5. நாட்டுவளம் அல்லது கயிலைக் காட்சி
6. கதைத் தலைவன் அல்லது தலைவியின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைச் சுவைகள் பலவும் அமைய எடுத்துக் கூறிக் கதையின் உச்ச நிலையில் அவர்தம் தலைமைச் சிறப்பு மேலோங்கிடுமாறு காட்டி முடித்தல்.
7. வாழி பாடுதல் என்று குறிப்பிடலாம் என்கிறார் (Gomathinayagam, 2007). இருப்பினும் கோயில்களில் நடைபெறும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளில் அமைப்பு முறையானது சிறிது வித்தியாசப்பட்டு கணப்படுகிறது.

## கடவுள் வணக்கம்

வில்லுப்பாட்டுப் பாடுவதற்கு முன் கடவுளை நினைத்து அவருக்குத் துதி பாடும் செயலே கடவுள் வணக்கமாகும். வில்லுப்பாட்டில் கடவுள் வணக்கம் எப்போதும் விநாயகர் துதிப்பாடலாகவே இருக்கும். அதன் பின்னரே காப்புப் பாடப்படும். ஆனால் சுத்தோலிக்க ஆலயங்களில் நடக்கும் வில்லுப்பாட்டிற்கு, கடவுள் வணக்கம் ஏசு நாதர் துதிப் பாடியே ஆரம்பிக்கும். "கடவுள் வணக்கத்தில் விநாயகர் துதிப் பாடக் காரணம், இடையூறுகள் நேரிடா வண்ணம் நிகழ்ச்சியை முடித்தற்கு வேண்டியே யாகும்" என்று மக்கள் கருதுகின்றனர். எனவே வில்லுப் பாட்டு நிகழ்ச்சியின் கடவுள் வணக்கமாக விநாயகர் துதியேப் பாடப்படுகின்றன.

“கணபதி தெய்வம் இன்னும் அருள்புரியுந் தெய்வம்
எம்மை ஆதரித்து அருர்புரிய ஓடிவந்தாயே
ஐந்துகரத்தால் உன்னருளை வாரி வழங்குவாயே
எங்கள் அன்புமனம் உன்னிடத்தில் அமைதி கொள்ளுமே
நாதன் செய்கழல் இணையடி வாழ்க!
எங்கள் நாவில் வளம்சேர அருள்புரியும் கணபதி வாழ்க! வாழ்க!”

என்றும் பாடல் வரிகள் விளக்குகின்றன (Informer – Rajkumar, Age 57).

## காப்பு

காப்பு என்பது "பாதுகாப்பு" என்ற பொருளைத் தரும். அதாவது தெய்வமானது மக்களைக் காத்தருள வேண்டுமென்ற நோக்கிலும், வில்லுப்பாட்டுப் பாடத் துவங்கி, பின் முடிக்கும் வரையிலும், யாதொரு தீங்குமின்றி நடைபெற வேண்டுமென்ற நோக்கிலும், இறைவனை வணங்கிப் பாடப்படும் பாடலைக் 'காப்பு' என்று கூறுவர். காப்பின் முக்கியத்துவத்தை வெண்பா பாட்டியல்,

“சாற்றரிய காப்பு தால் செங்கீரை சப்பாணி”

என்று பிள்ளைத்தமிழ் பருவத்தில் ஒன்றாகக் குறிப்பிடுகின்றது. பிள்ளைத்தமிழில், முதற்பருவமானக் காப்புப்பருவத்தில் பாட்டுடைத் தலைவனைக் காத்தருளுமாறு இறைவனை வேண்டுவர். பெரும்பாலும் திருமாலை காப்புக் கடவுளாகக் கூறுவது மரபு (Jayam, Chandralekha Vaidyanathan, 2016).

காப்புப் பாடலில் திருமாலை மட்டும் பாடுவதோடு மட்டு மல்லாமல் பிற தெய்வங்களையும் பாடுவர். இதில் சிவன், கணபதி, முருகன், லெட்சுமி, சரஸ்வதி, பார்வதி போன்ற தெய்வங்கள் பாடப்படும். சான்றாக, திருமாலைப் பற்றி காப்புப் பாடும்போது,

“அரிஹரி நாராயணனே

ஆதிமூலமானவரே இந்த

அகிலத்தை இதயத்தில்

அன்புடன் வைத்துமே- காத்தவா

அடியேன் பாட அருள்புரிய வேண்டுமே”

என்றும், பிற தெய்வமாகிய கணபதியை காப்பாகப் பாடும்போது (Informer – Rajkumar, Age 57),

“அயனுடன் மாலும் தேடி

அடிமுடி காணாது இன்பம்

நயன மூன்றுடைய பேத

நாயகன் தன்னைப் போற்றி

உயர்குலத் தனத்தாள் ஈன்ற

உயர்மூவர் கதையைப் பாட

கரிமுகனான எங்கள்

கணபதி காப்புதாமே”

என்று பாடப்படுகிறது

மூலமாகவும், மனிதர்களால் ஏவப்படுகின்ற தீய சக்திகள் மூலமாகவும், தீங்கு நேரக் கூடாது என்று பாடுகின்றனர். மேலும் ஐம்பூதங்கள் மூலமாகவோ, விஷ உயிரினங்கள் மூலமாகவோ, இடையூறு வராமல் நிகழ்ச்சி ஒழுங்குற அமைய வேண்டும் என்றும் பாடுகின்றனர் (Informer – Rajkumar, Age 57).

## வருபொருள் உரைத்தல்

காப்புப் பாடல் முறையைச் சேர்ந்தது வருபொருள் உரைத்தல் ஆகும். காப்புப் பாடலின் மூலம் வில்லுப்பாட்டுப் புலவன் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியில், தான் பாடப் போகும் கதையினை ரத்தினச் சுருக்கமாகப் பாடி உரைத்தல் 'வருபொருள் உரைத்தல்" ஆகும். இதற்கு சான்றாக,

“மாட்டிலே ஏறும்ஈசன் வரத்தினால் லிங்கம் வாங்கி

கோட்டுமா குயத்தாளீன்ற குமுதன் ஆதித்தநீலன்

ஏட்டதன் படியிதுவே ஏற்றருண்டு இட்டுமே

முக்காட்டிலே போயிருந்த காவியம் பாடுவோமே”

என்று முத்தாரம்மன் வரலாற்றை நயமாக, தெளிவாகக் கூறியிருப்பது வியக்கத்தக்கது ஆகும் (Informer – Rajkumar, Age 57).

## அலங்காரம்

அலங்காரம் என்பது வர்ணனையுடன் கூடிய மொழியை அழகுபடுத்திப் பாடுவதாகும். இது செய்யுள் வடிவிலேயே அமைந்திருக்கும். சுவைஞர்கள் இப்பாடல்களை விரும்பிக் கேட்பர். குறிப்பாக அலங்காரம் தெய்வத்தைப் போற்றிப் பாடும் வகையிலேயே அமைந்திருக்கும்.

"பெண்ணிற்கு அலங்காரம் அணிகலன்

பண்ணிற்கு அலங்காரம் செய்யுள்"

என்னும் வாக்கு அலங்காரம் என்னும் சொல்லுக்கு உள்ள மதிப்பைச் சுட்டிக்காட்டுவதாக உள்ளது. அலங்காரத்தில் மொழி நடை சிறப்பே முதன்மையாகக் கருதப்படும். மேலும் வில்லிசைக் கலைஞனின் எண்ணத்திற்கேற்பப் பாட்டுப் பாடப்படுகிறது. அலங்காரத்திற்கு வரையறை எதுவும் கிடையாது. இது கடவுள் வணக்கத்தைச் சார்ந்ததாகவே கருதப்படும்.

"அத்தனே தில்லையில் நடனமாடி

கூத்தாடி அருள்தரும் மணியே

முத்தனே முதல்வனே முற்றிலும்

உனைப் பணிந்தேன் ஏற்றேன்

பக்தர்கள் வினையைத் தீர்க்கும் பரமனை

மறந்திடா பவளென் குன்றம்

தித்தனே நிமலா உன் நின்னடி

போற்றினேன் வாழ்த்தினேன்"

என்று அலங்காரம் பாடுகின்றனர் (Informer – Rajkumar, Age 57). இதில் முதன்மைத் தெய்வங்களும், சிறு தெய்வங்களும் என்று எல்லாத் தெய்வங்களையும் வைத்து அலங்காரம் பாடுவது, ஒவ்வொரு வில்லிசைக் கலைஞனுக்குமுள்ள தனிச் சிறப்பாகும். இத்தகைய அலங்காரம் காப்பிற்குப் பின் பாடப்படுகிறது (Informer – Senthikumar, Age 43).

## குருவணக்கம்

வில்லிசைக் கலைஞன், தான் கற்ற வில்லிசைக் கலைக்குக் காரணமாக இருந்த குருவை ஒவ்வொரு வில்லிசை நிகழ்ச்சியிலும், நினைவு கொண்டு தொழுகிறான். குருவணக்கம் என்பது குருவுக்கு மரியாதைச் செலுத்தும் வகையில் பாடப்படுவதே ஆகும். இதனை "குருவடிப் பாடுதல்" என்றும் கூறுவர். இத்தகைய குருவணக்கம் அலங்காரத்திற்குப் பின் அமைகிறது. வில்லிசைக் கலைஞள் குரு வணக்கம் பாடுவதால் குருவின் மதிப்பையும், சிறப்பையும் அறிந்து கொள்ள முடிகிறது. குருவனக்கம் பக்திப் பாடலுக்குரியத் தனிச் சிறப்புக் கூறாகும். வில்லுப்பாட்டு நிகழ்ச்சியில் பிழையின்றி பாட, அருளும் படி குருவை வேண்டுவர். இதனை,

"குரு தொட்டுக் காட்டா வித்தை

சுட்டுப் போட்டாலும் பலிக்காது"

என்பதன் மூலம் குருவின் முக்கியத்துவத்தை உணரலாம். மேலும் வில்லிசைக்கு வில் எவ்வளவு முக்கியமோ, அதுபோல வில்லிசைப் பவனுக்கு குரு முக்கியம். அத்தகைய குருவைச் சிறப்பித்துப் பாடுவது வில்லிசைக்குச் சிறப்பாகும். "குருவணக்கம் என்பது குரு கற்றுக்கொடுத்தக் கல்விக்கு மரியாதை செய்யும் விதத்திலும், அவரைப் பிறருக்கு எடுத்துக் கூறும் விதத்திலும் வாழ்த்தாகப் பாடி உரைப்பதாகும்" (Informer – Babu, Age 47).

"பொன்னோடு பொருள் சிறக்கும்

புதூர் திரு நீலபெருமாள்

தேன் தமிழில் மணங்கமழும்

தெக்குறிச்சி புலவர் புகழ்

முக்கனியும் சிறந்திலங்கும்

முருங்கவிளை சுப்ரமணியம்

யாரை நாங்கள் மறந்தாலும்

எங்குருவை மறப்பதில்லை”

என்ற பாடலில், குருவணக்கம் சிறப்பாக அமைகிறது. குருவிற்கு புலவர், அண்ணாவி, ஆசான், குரு போன்ற பல பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. புலவரின் பெயர் மற்றும் மொழிப்புலமையும் இப்பாடலில் வருகின்றது (Informer – Rajkumar, Age 57).

## அவையடக்கம்

குருவணக்கத்திற்குப் பின் அவையடக்கம் நடைபெறும். வில்லிசைக் கலைஞர்கள் தாங்கள் பாடக்கூடியப் பாடல்களில் சொற்குற்றம், பொருட்குற்றம், இசைக்குற்றம் ஏதேனுமிருப்பின், அதனைக் குறையெனக் கருதாமல், மக்கள் பொறுத்தாட் கொள்ளுமாறு தெய்வத்தின் சாட்சியாகவும், குருவின் சாட்சியாகவும் மொழிந்துப் பாடுவதே அவையடக்கம் ஆகும். இதனை அவைவணக்கம் என்றும் கூறுவர். மேலும் எல்லா வில்லிசைக் கலைஞர்களும் அவையடக்கம் பாடுவதில்லை. வில்லுப்பாட்டு நிகழ்ச்சியில் அவையடக்கம் பாடப்படுவதின் நோக்கம், வில்லிசைக் கலைஞர்கள் தங்கள் பெருமையையும், முக்கியத்துவத்தையும் விடுத்து, அவைக்கு முன்னர் தங்களைத் தாழ்த்தி, வில்லுப்பாடல்களில் ஏற்படும் பிழைகளைப் பொறுந்தருள வேண்டுவதே ஆகும் (Informer – Senthikumar, Age 43).

வில்லுப்பாட்டுப் பாடும் போது அவையடக்கம் பாடுவதால் நேரம் வீணாகிறது. வில்லிசைக் கலைஞர்கள் மக்களுக்கு பெரும்பாலும் அறிமுகமானவர்களாகவே இருப்பதால் அவையடக்கம் என்பது வில்லுப்பாட்டிற்குத் தேவையில்லாத ஒன்றாகும் (Informer – Babu, Age 47).

இருப்பினும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியில் அவையடக்கம் மிகவும் இன்றியமையாத ஒரு நிகழ்வாகவே கருதப்படுகிறது. ஏனெனில் எல்லா மக்களுக்கும், வில்லிசைக் கலைஞர்களின் இயல்பும், பண்பும் தெரியாது. இந்நிகழ்ச்சி மட்டுமே வில்லிசைக் கலைஞனை நன்கு மக்களுக்கும், அவைக்கும் புலப்படுத்துவதாகும்.

அன்புமிக்க பெரியோர்களே! நாங்கள் பாடக் கூடியக் கதைகளில் சொற்குற்றம், பொருட்குற்றம், இசைக்குற்றம் இப்படி எவ்விதக் குற்றம் இருந்தாலும், அதனை தங்களது பிள்ளைகளின் மழலை மொழியென மதித்து, ஆட்கொள்ள அன்புடன் வேண்டிக் கொள்கிறோம் என்று கூறி அவையடக்கப் பாடலைப் பாடுவர்.

“கருவாய் தரித்ததோர் கருக்குழியில்

தையல் எனைப் பத்துமாதம் சுமக்க

உருகுவாய் பிறப்பித்த மாதாபிதா

உலகம் அருள் செய்த குருவே மாதா

நாவால் ஒரு பிழை வராமல்

நாவில்குடி கொள்வாய் சர்ஸ்பதியே”

என்று சேகரித்தப் பாடலின் மூலமாக, அவையடக்கத்தை உணர்ந்து கொள்ளலாம் (Informer – Rajkumar, Age 57).

## கலைஞர் அறிமுகம்

வில்லுப்பாட்டு நிகழ்கலையில் கலைஞர் அறிமுகம் மிகவும் முக்கியமானதாகும். கலைஞர் அறிமுகம் என்பது திறமையான கலைஞர்களை வில்லிசைப்புலவர் மக்களுக்கு அறிமுகம் செய்து வைக்கும் நிகழ்வு ஆகும். இது அவையடக்கத்திற்குப் பின் நடைபெறும்.

வில்லிசைப் புலவர் தன்னைத் தானே அறிமுகம் செய்து கொள்ள மாட்டார். எனவே வில்விசைப் புலவரைக் குருவோ அல்லது பின்பாட்டுக்காரரோ அறிமுகம் செய்து வைப்பர். எவ்விதமெனில்,

"மல்லிகைப் பூ தமிழெடுத்து

மணம் கமழ பேசி

கையிரண்டில் கோலெடுத்து

கலைநயமாய் வீசி

விதவிதமாய்ப் பாடுகின்ற

வீணைக்குரல் வித்தகனே

வில்லிசை நாயகன்"

என்று வில்விசைப் புலவனை மக்களுக்கு அறிமுகம் செய்து வைக் கின்றனர் (Informer – Rajkumar, Age 57). இதற்கு பின், பிறக் கலைஞர்களை முறைப்படி வில்லிசைப் புலவரே அறிமுகம் செய்து வைப்பார். இதில் குடம் இசைப்பவர், பின்பாட்டுக்காரர், உடுக்கை இசைப்பவர், தபேலா இசைப்பவர், ஜாலரா இசைப்பவர், ஆர்மோனியம் இசைப்பவர் என்று எல்லோரையும் அறிமுகம் செய்து வைப்பார். மேலும்,

"இவர்

விரல்களால் வித்தை செய்யும் விந்தை

தாளங்கள் விற்கின்ற சந்தை

இடக்கையும், வலக்கையும் நமக்கெல்லாம் உறுப்பு

உடுக்கையை அடிப்பதனால்

இவருக்கது சிறப்பு"

என்று உடுக்கை இசைப்பவரை கலைஞர் அறிமுகம் செய்கிறார் (Informer – Rajkumar, Age 57).

## பாடும் களத்தின் சிறப்பு

வில்லுப்பாட்டில் பாடும் களத்தின் சிறப்புப் பற்றிப்பாடுவது வழக்கமான ஒன்றாகி விட்டது. பாடும் களம் என்பது வில்லுப்பாட்டு நிகழ்வானது நடக்கும் இடமாகும். அத்தகைய இடத்தைப் பற்றிச் சிறப்பித்துப் பாடுவது ஒவ்வொரு வில்லிசைப் புலவனுக்குரியச் கடமையாகும். இதனை 'நாட்டு வளப்பாடல்' என்றும் கூறுவர். இப்பாடல் நாடு பற்றியோ, நகரம் பற்றியோ, ஊர்ப் பற்றியோ, அமையும். ஆனால் பாடும் களம் பற்றிச் சேகரித்தப் பாடலில் ஊர்ச் சிறப்பே இதில் பாடப்பட்டு உள்ளது. அதாவது,

"நாலுபக்கம் சோலைகளாம்

நடுவில் நல்ல நந்தவனமாம்

தென்னைமர காவுகளாம்

புன்னைமர சோலைகளாம்

நாமகளும் பூமகளும்

நலமுடனே வீற்றிருக்க

இருப்பதற்கு நல்ல இடம்

இராஜாகமங்கலம் என்று சொல்லி"

என்ற பாடும் களச்சிறப்பில் இராஜாகமங்கலம் என்ற ஊரின் சிறப்பே எடுத்தாளப்பட்டுள்ளது (Informer – Rajkumar, Age 57).

## கதை ஆரம்பிக்கும் இடம்

வில்லிசைக் கலைஞர்கள் பெரும்பாலும் கதை ஆரம்பிக்கும் போது பரமசிவனும், பார்வதியும் கைலாசமலையில் வீற்றிருக்கும் போது தேவாதி தேவரெல்லாம் தரிசனம் செய்தனர் என்று கூறுவதிலிருந்து வரலாறு தொடங்கும் (Informer – Vellaiyan, Age 39). ஏனெனில் பரமசிவன், பார்வதி ஆகியோரை மையமாகக் கொண்ட காவிய வரலாறுகளே அதிகம் காணப்படுகின்றன. மேலும் அவர்களைப் பற்றி முதலில் பாடினால் தேவர்கள் அனைவரது ஆசியும் தங்களுக்கு கிடைக்கும் என்று வில்லிசைக் கலைஞர்கள் நம்புகின்றனர் (Informer – Babu, Age 47).

## கயிலைக்காட்சி

வில்லுப்பாட்டுப் புலவர் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியில் கதைத் தொடங்கும் போது, கயிலைக் காட்சியைப் பாட்டாகப் பாடியேத் தொடங்குகிறார். சான்றாக,

"கயிலையில் வீற்றிருக்கும்

கனிவான அம்மையப்பனே

சிவனே சிவன் முதலே

சித்தம்பலத் தாண்டவரே - இந்த

சிறியவன் பாடவும், உறுத்திரிந்து

வரவேண்டுமே திரிபுரத்தை

சிரித்தெரித்த மூர்த்தியே"

என்ற கயிலைக் காட்சிப் பாடல், சிறப்புற அமைவதைக் காணலாம் (Informer – Rajkumar, Age 57).

## கதைக்கூறல்

வில்லுப்பாட்டு நிகழ்ச்சியின் கதைக்கூறல் பகுதியில் பாடலைப் பாடி விளக்கம் கூறுவார் வில்லுப்பாட்டு தலைமைப் பாடகர். அதற்கேற்ப மற்ற கலைஞர்களும், அவரது குரலுக்கு தகுந்தவாறு தங்களது குரலை ஏற்றிப்பாடுவர்.

கதைகளைக் கூறும் போது கலைஞர்கள் அக்கதைப் பாத்திரங்களாய் மாறி செயல் படுவதுண்டு. நாடகத் தன்மை கொண்ட உரையாடல் போன்ற அமைப்புடைய வசனம் போன்றவை கதைக் கூறும் மரபில் காணப்படும். இதனைக் கீழ்வரும் பாடல் மற்றும் உரையாடல் வரிகளால் அறியலாம்.

"நெய்யதிலே கைவிடவோ

நீண்ட மழு ஏந்திடவோ

பொய்யரவம் பாம்படைத்த

பொற்குடத்தை கைவிடவோ

என்ற பாடலுக்கு உரையாக"

"ஓர் அண்டாவில் நெய்யை விட்டு கொதிக்கக் காய்த்து என் கையை இட்டு காண்பிக்கட்டுமா?"

வலம்: இது சங்கடமான விஷயம், கொதிக்க காய்த்த நெய்க்குள்ளே கையைப் போட்டா வெந்துபோகும். நான் வேப்பண்ணெயைக் காய்த்து போட்டு விடிய விடிய ஈ விரட்ட வேண்டியது தான். ஆகையினால் அதுவும் வேண்டாம் (Muthuswamy, 1995).

இடம்: ஒரு குடத்துக்குள்ளே நல்ல பாம்பை அடைத்து, கையைப் போட்டு தரட்டுமா?

வலம்: ஐயய்யோ! குடத்துக்குள்ளே பாம்பை அடைத்து கையைப் போட்டா பாம்பு சும்மா விடுமா. நறுக்கென்று கடிக்கும். நான் வெடுக்கென்று தாலியை அறுக்க வேண்டியது தான்" என்ற உரை சாஸ்தா கதையில் வருகின்றது (Muthuswamy, 1995). இவை உரையும், பாட்டுமாக அமைந்தாலும், வில்லுப் பாட்டுக் கலைஞர்கள் மக்களுக்கு ஆர்வத்தைத் தூண்டும் வகையில் தெய்வக்கதைகளை மக்களுக்கு உணர்த்த வேண்டும் என்ற நோக்கிலும், கதையில் வருகின்ற கதாபாத்திரங்களாகவே மாறி செயல்பட்டு கதைக்கூறல் பகுதிக்குச் சிறப்பு சேர்க்கின்றனர்.

## சாஸ்தா வரலாறு

சாஸ்தா வரலாறு கோயில்களில் நடைபெறும் வில்லுப்பாட்டு நிகழ்வின் போது கதை நிகழ்வின் முதலில் பாடப்படும் சிறப்பு வாய்ந்த வரலாறாகும். சாஸ்தாவை கூறிவிட்டுத்தான், பிற கதை நிகழ்வுகளை வில்லுப்பாட்டு நிகழ்ச்சியில் தொடர்ந்து நிகழ்த்துவர்.

## சாஸ்தா - பெயர்க்காரணம்

தேவர்கள் அமிர்தம் கடையும் போது, அசுரர்கள் தொடர்பாக வல்லரக்கன் பிறக்கிறான். அவ்வல்லரக்கன் பாதாள உலகை ஆளுகின்றான். அப்போது அவன் நெறி தவறியதால், மற்று மன்னர்கள் அவன் மீது படையெடுக்கின்றனர். இதனால் அரக்கன் சிவனை நோக்கி தவமிருக்கின்றான். அப்போது தூண்டு விரல் ஆள்காட்டி விரல் கொண்டு நீட்டினால், எதிரியின் தலை தெறிக்க வேண்டும் என சிவனிடம் வேண்டி வரத்தைப் பெறுகின்றான். அவ்வாறு அரக்கன் பெற்ற வரத்தின் மூலம் தேவர்களை அழிக்கின்றான். எனவே அவனை அழிக்க மகாவிஷ்ணு பெண் வேடமெடுத்து வந்து அரக்கனைக் கொன்றார். அரக்கனை கொன்ற விஷ்ணு நேராக சிவனிடம் பெண் வேடத்துடன் வந்தார். அப்பெண்ணின் அழகில் சிவன் மயங்கியதால், ஒரு விந்து வெளிப்பட அதுவே சாஸ்தா பிறக்கக் காரணமாயிற்று. அரி என்ற பெண்ணிற்கும், அரன் என்ற சிவனிற்கும் பிறந்தவர்தான் அரிகர சுதனாகிய சாஸ்தா அல்லது ஐயனார் ஆகும். இவ்விதம் சாஸ்தா வரவாறு பாடி முடித்த பின்பு, சுவாமி வரலாறும், முத்தாரம்மை வரலாறும் பாடப்படும். சாஸ்தா என்பது முதலாவது பாடும் வரலாறு ஆகும். இந்த சாஸ்தாவில் அரிகர சுந்தர ஐயப்பன் பற்றியோ அல்லது கண்ணன் பிறப்பு பற்றியோ மட்டுமே பாடப்படும்.

## சாஸ்தாவில் விருத்தம்

சாஸ்தாவின் கதை இடம்பெறும் பாடல்களை "விருத்தம்" என்று அழைப்பர். இதில் முழு கதையும் அமையும். உரை வடிவம் வராது. எவ்விதமெனில்,

"வெய்யும் தவத்தால் நின்றரக்கன்

விரலால் தூண்டவரம் வாங்கி

செய்யச் சிவனார் தனை வெருட்ட

திருமால் அருகே மகிழ்ந்து செல்ல

தையல் வடிவாய் கோலம் கொண்டு

சத்தியம் செய்து வரம் அளித்த

ஐயன் பிறந்த கதை படிக்க

ஆனை முகவன் காப்பதாமே"

என்று சாஸ்தாவின் விருத்தப்பாடல் கதையை எடுத்துரைக்கின்றது (Muthuswamy, 1995).

சாஸ்தாவைப் பாடும் போது பாடலை இடையில் நிறுத்தக்கூடாது. அப்படியே நிறுத்தினாலும் குழந்தை பிறந்ததாக அதாவது சாஸ்தா பிறந்ததாகக் காட்டியப் பின்னர் தான் கதையை நிறுத்த வேண்டும். இல்லையெனில் தெய்வ அனுக்கிரகம் கிடைக்காது என்றும் பாடுவது மறந்து விடும் என்றும் வில்லிசைக் கலைஞர்கள் கருதுகின்றனர்.

## விட்டகதை

வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளில் முதல் நாள் பாடிய வில்லுப்பாட்டின் நிகழ்வுகளை, மறுநாள் தொடர்ந்து நிகழ்த்துவர். அப்போது விட்டகதை என்ற பாடலைப் பாடியே நிகழ்ச்சியைத் துவங்குவர். விட்டகதை என்பது ஒரு கதையைப் பாதியில் நிறுத்தி விட்டு அதனை மீண்டும் தொடங்கும் விதமாக கணபதியை நினைத்துத் தொழுது ஆரம்பிக்கும் கதையாகும். இதனை,

"விட்டகதை குறைகள் பாட

விநாயகர் காப்பு தாமே

தொட்டகுறை கதைகள்பாட

தொந்தி கணபதி காப்பதாமே"

என்ற பாடலடிகள் தெளிவுபடுத்துகின்றன (Informer – Rajkumar, Age 57).

## சுதேசிக் கதைகள்

சுதேசிக் கதைகள் என்பது சொந்த நாட்டில் உள்ள சிறப்படைந்தவர் களின் வரலாறுகளையும், பொருட்களையும் பற்றி மக்களுக்கு வில்லுப் பாட்டு வாயிலாக உணர்த்துவது ஆகும். மேலும் இச்சுதேசிக் கதைகள் ஏட்டுக் கதைகள் தொடங்கும் முன் பாடப்படும். சுதேசிக் கதைகள் கதை நிகழ்வின் போது முதலில் பாடப்படுவதன் நோக்கம் சிறியோர் முதல் பெரியோர் வரை ரசித்து கேட்பது, நிகழ்ச்சித் தொடங்கிய ஆரம்ப நிலையில் தான் ஆகும்.

## சுதேசிக் கதைப் பாடுவதன் சிறப்பு

சுதேசிக் கதைப் பாடுவதன் நோக்கமே, சொந்த நாட்டிலுள்ள சிறப்புகளையும், உயர்ந்தோர்களின் வரலாறுகளையும், பொருட்களின் தரத்தையும் இந்த நாட்டில் வாழும் ஒவ்வொரு மக்களுக்கும் புலப்படுத்துவதேயாகும். இதனை வில்லுப்பாட்டு நிகழ்ச்சியின் மூலமாக பரப்புவதால், மக்கள் மனதில் எளிதில் புகுந்து விடுகிறது எனலாம். மேலும் சுதேசிக் கதைகளில் சிறப்பாகப் பாடப்படும் கதைகளாக கன்னியாகுமரி மாவட்டத்தில் அய்யா வைகுண்டசாமிக் கதை, சுவாமி விவேகானந்தர் கதை, செம்புலிங்கம் கதை, நேசமணி கதை போன்றவை ஆகும்.

## ஏட்டுக்கதை

ஏட்டுக்கதை என்பது பாடக்கூடியக் கோயில்களின் தெய்வத்தைப் பற்றி ஏட்டில் கதைப்பாட்டாக எழுதி வைத்து இருத்தல் ஆகும். சில கோயில்களுக்கு ஏட்டுக்கதை முக்கியமானதாக இருக்கும். கோயில்களில், மனிதனாகப் பிறந்து பின்னர் தெய்வமாகியவர்களைப் பற்றி ஏட்டுக்கதை அமைத்திருப்பர். ஏட்டுக்கதையை நிகழ்த்துவதை "ஏடு வாசித்தல்" என்றும் "ஏடு பாடுதல்"என்றும் கூறுகின்றனர். ஏட்டுக் கதையை முன்னரே ஏதேனும் வில்லிசைப் புலவரைக் கொண்டு எழுதி வைத்திருப்பர். இதனை ஆண்டு தோறும் கோயில்களில் நடைபெறும் வில்லுப்பாட்டு நிகழ்வின் போது வில்லிசைப் புலவனிடம் பாடுவதற்குக் கொடுப்பர். வில்லிசைக் கலைஞர்களும் தனக்கேயுரியப் பாணியில், தன் திறமைக்கேற்ற படி இசை புனைந்து வில்லுப்பாட்டு நிகழ்த்துவர். இந்நிகழ்வின் போது எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல் வில்லிசைப் புலவனின் கையில் ஏட்டுக்கதைக் கொடுக்கப்படும். ஏட்டுக்கதைப் படித்தலைச் சிறு தெய்வ வழிபாட்டிற்குச் செய்யும் பெரும் சிறப்பாகக் கருதுகின்றனர்" (Informer – Vellaiyan, Age 39).

## ஏட்டுக்கதையின் சிறப்பு

ஏட்டுக்கதை என்பது ஏட்டில் எழுதியதை மாற்றிப் பாட முடியாத, நவீனப்படுத்த முடியாத வில்லுப்பாட்டு ஆகும். இது ஏட்டில் தான் இருக்கும். கிராமியப் பாடல்களின் நடைச்சீரை நவீனப்படுத்தலாம். ஆனால் ஏட்டுக் கதையிலிருக்கும் இரட்டைச் சீர், நான்கு சீர் போன்றவைகளை நவீனப்படுத்த முடியாது. அதாவது சூழ்நிலைக் கேற்பப் பாட்டை மாற்றி பாட முடியாது. இத்தகையப் பாடல்களே ஏட்டுக் கதையில் இடம் பெற்றிருக்கும்.

## சிறந்த ஏட்டுக் கதைகள்

ஏட்டுக் கதைகளில் தெய்வங்களைப் பற்றியக் கதைகள் அதிகம் காணப்படுகின்றன. அதாவது சுடலைமாடன் கதை, பால மார்க்கண்டேயன் கதை, வலைவீசிய கதை (எமன்), பார்வதி அம்மை, முத்தாரம்மை, கண்ணன் பிறப்பு, இசக்கியம்மன், பத்ரகாளியம்மன் போன்ற தெய்வங்களைப் பற்றி ஏட்டுக்கதைகள் சிறப்பாகக் காணப் படுகின்றன. மேலும் மனிதனாகப் பிறந்து தெய்வமாகியவர்களைப் பற்றியும், ஏட்டுக்கதைகள் நிறைய உள்ளன. பலவேசக்காரன் கதை, சேர்வைக்காரன் கதை, வெள்ளைக்காரச் சாமிக்கதை, பிச்சைக்காரன் கதை, வலியதம்பி குஞ்சி தம்பி கதை போன்றவை சிறப்பு வாய்ந்த ஏட்டுக்கதைகள் ஆகும்.

## கேள்விக்கதை

கேள்விக்கதை என்பது மக்கள் இன்புறும் வகையிலும், பொழுதைப் போக் கும் வகையிலும், நிகழ்த்தும் வில்லுப்பாட்டு நிகழ்வாகும். கேள்விக்கதையை 'செவிக்கதை' என்றும் கூறுவர். கேள்விக்கதையானது பெரும்பாலும் இன்பியல் முடிவுகளையோ அல்லது துன்பியல் முடிவுகளையோ பெற்றிருக்கும். இல்லையேல் இரண்டுமே அமைந்திருக்கும். மேலும் ஒரு வில்லுப்பாட்டு நிகழ்ச்சியில், இரண்டு கேள்விக்கதைகளாவது பாடப்படும். அக்கதைகளில் ஒன்று துன்பியல் முடிவையும், மற்றொன்று இன்பியல் முடிவையும் கொண்டிருக்கும். இக்கேள்விக்கதை தெய்வமேறுதலுக்கு முன் மக்கள் ரசித்து மகிழும், சுவையான வில்லுப்பாட்டு நிகழ்ச்சி ஆகும். இதில் துன்பியல் முடிவு கொண்ட வில்லுப்பாட்டு முதலிலும், இன்பியல் முடிவு கொண்ட வில்லுப்பாட்டு இரண்டாவதும் பாடப்படும்.

## சிறந்த கேள்விக் கதைகள்

கேள்விக்கதை தெய்வக் கதைகளாகவும், 'புராணக் கதைகளாகவும் உள்ளன. வள்ளித் திருமணம், கண்ணன் பிறப்பு, முருகன் காட்சி, கிருஷ்ணன் தூது, முப்புரம் எரித்தோன் போன்றவைகள் தெய்வக்

கதைகளாகும். புராணக் கதைகளாக கர்ணன், விராடப்பருவம், சீதாக் கல்யாணம், நளபாகம், அரிச்சந்திரப் புராணம், அர்ஜூனன் தவநிலை, பரதன், பாஞ்சாலி சபதம், கண்ணகி, ஏகலைவன், அபிமன்யு. கீசகன் போர் ஆகியவைக் காணப்படுகின்றன.

## கதையாடல்கள்

வில்லுப்பாடல்களிலுள்ளக் கதையாடல்களைப் பிறந்த கதை, இறந்த கதை என்று இருவகைப்படுத்துவர். பெண் தெய்வங்களின் வரலாற்றைச் சொல்லும் கதைகளைத் "தெய்வப் பிறவி" அல்லது 'தெய்வ வம்சம்" என்பர். இறப்புப் பற்றிய கதையாடல்களுக்குரியோரை 'வெட்டுப்பட்ட வாதைகள்" அல்லது 'இறந்துப்பட்ட வாதைகள்' அல்லது "பேய்ப் படைகள்" என்று மக்கள் குறிப்பிடுவர். மேலும் வில்லுப்பாடல்களின் தொடக்கத்தில் தெய்வங்களை வருத்தியப் பின், இன்னாரின் 'இறந்த கதைப்' பாட, இன்னாரின் 'பிறந்த கதைப்' பாட என்று சுட்டிப் பாடுவர். இறந்த கதை இவ்வுலகில் ஒரு வட்டாரத்தில் பிறந்து, வாழ்ந்து இறந்து போனவர்களின் வரலாறு ஆகும். பிறந்த கதைகள் ஆண், பெண் தெய்வங்களின் புராணக்கதைகளாக அமையும் (Lourdu, 2000).

## துடுக்குச்சீர்

வில்லுப்பாட்டின் சிறப்பாகக் கருதப்படுவது துடுக்குச்சீர் ஆகும். துடுக்குச்சீர் என்பது சாமியை நேரில் வரவழைப்பதற்குப் பாடக்கூடியப் பாட்டு ஆகும் (Informer – Vellaiyan, Age 39). துடுக்கு என்பது உடுக்கு இசைக்கப்படும் சிறப்பான சந்தம் ஆகும். இச்சந்தத்தை சீர் அமைத்து, வில்லுப்பாட்டு பாடினால் அதுவே'துடுக்குச்சீர்' என அழைக்கப்படுகிறது.

## தெய்வமேறுதல்

வில்லுப்பாட்டு நிகழ்ச்சியில் துடுக்குச்சீர் பாடும் போது, தெய்வமானது மனிதன் உடலில் ஏறும் என்றதொரு நம்பிக்கை இக்கலைஞர்களிடம் காணப்படுகிறது. இதனை தெய்வமேறுதல்', 'தெய்வம் புகுதல்' 'தெய்வமுறுதல்' என்றெல்லாம் கூறுகின்றனர். தெய்வமேறுதல் நிகழ்வு நடைபெறவில்லையெனில் வில்லுப்பாட்டு நிகழ்ச்சி சிறப்பாக அமையவில்லை என்றே மக்கள் கருதுகிறார்கள்.

## வரத்துப்பாட்டு

சாமியாடிகள் ஆட விரும்பும்போது அவர்களுக்குள் ஆவேசம் வரவழைக்கப்படும் பாடலை 'வரத்துப்பாட்டு' என்று அழைப்பர். இவ்வில்லுப்பாட்டில், தெய்வமேறி சாமி ஆடுதலுக்கு 'ஆராசனை' அல்லது "சாமியாட்டம்' என்று பெயர்.

## துடுக்குச்சீர் பாடும் முறை

சாமி ஆடும் போது துரிதமாகப் பாடவேண்டும். அதாவது பாட்டும், தாளமும் சாமியின் ஆட்டத்திற்கு ஏற்றவாறு அமைய வேண்டும். துடுக்குச்சீர் பாடும் வேளையில், உடுக்கையைப் பயன்படுத்தினால் தெய்வமேறுதல் உக்கிரமாக அதாவது சக்தி வாய்ந்ததாக இருக்கும் என்று கூறுகின்றனர் (Informer – Babu, Age 47).

துடுக்குச்சீர் சிறுதெய்வக் கோயில்களிலுள்ள சிறு தெய்வங்களுக் காகப் பாடப் படும் நிகழ்ச்சியாகும். இது தெய்வமேறுதலுக்காகப் பாடக்கூடியச் சீர் ஆகும்.

## துடுக்குச்சீர்ப் பற்றியச் செய்திகள்

துடுக்குச்சீர்ப் பாடும் போது வில்லிசைப் புலவனுக்கு சோர்வு ஏற்பட்டால், அதனை மக்களுக்குப் புலப்படுத்தாமலும், நிகழ்வில் தொய்வு ஏற்படாமலுமிருக்க மேளத்தினை முதன்மைப் படுத்துவர். கருவிகளால் ஒலிக்கப்படும் மேள இசையானது வில்லிசைப் புலவனின் சந்தத்திற்கு வந்து விட்டால் பாதிப்பாட்டும், பாதி மேளமுமாகத் துடுக்குர்ச்சீர் அமையும். சில சமயங்களில் தெய்வமேறியவரே மேளத்தையும், வில்லிசைப் புலவனையும் மாறி மாறி பாடச்சொல்லும் வழக்கமும் உண்டு. மேளத்தின் உச்சக் கட்டத்தில், தெய்வம் ஏறியவர் அருள் வாக்கு உரைப்பார். தெய்வம் கூறும் வாக்கை "அருள்வாக்கு" என்பர். பின்னர் தெய்வம் அருள்வாக்குக் கூறிவிட்டு மலை ஏறும். 'மலையேறுதல்' என்பது அருள்வாக்குக் கூறிவிட்டு, தெய்வம் மனித உடலிலிருந்து நீங்குதல் ஆகும். இதன் மூலமாக துடுக்குச்சீரானது முடிவுக்கு வரும். இதே போன்று கோயில்களிலுள்ள பிற சிறு தெய்வங்களுக்கும் துடுக்குச்சீர் பாடப்படும். இறுதியில் மங்களம் பாடி வில்லுப்பாட்டு நிகழ்ச்சியை முடித்து விடுவர்.

## மங்களம்

வில்லுப்பாட்டு நிகழ்ச்சியின் முடிவில் மங்களம் பாடி நிகழ்ச்சியை நிறைவு செய்வர். இதனை 'வாழிப்பாட்டு" என்றும் கூறுவர். மேலும் மங்களம் பாடும் போது எட்டு மலை, ஏழுகடல், சப்த கன்னி, ரிஷி, கலைகள், பரமசிவன், பார்வதி, மகாவிஷ்ணு, மகாலெட்சுமி, போன்ற தெய்வங்களையும் ரசிகர்கள், பந்தல், பொங்கல், ஒலிப்பெருக்கி, நாதஸ்வரம், வில், குருநாதர், ஏற்பாடுச் செய்தோர் என்று அனைவரையும் வாழ்த்திப்பாடி முடிக்கும் பரபு வில்லிசைக் கலைஞர்களிடையே காணப்படுகிறது. சான்றாக,

“வாழ்த்து கீதம் பாடுதற்கு

வானசரஸ்வதி வரமருள்வாய்

ஆழி சூழ்ந்ததொரு நல்ல பூதலமும்

அட்டகிரிகள் எட்டு பர்வதமும்

அண்டம் சூழ்ந்த குன்று மலையொடு

ஊரும் தழைத்து வாழ்க

இட்ட இடம் படுக்கை வாழ்க

ஏகாந்த பந்தல் வாழ்க”

என்ற பாடல் அடிகள் மூலம் அறியலாம் (Informer – Rajkumar, Age 57).

## வில்லுப்பாட்டிற்குரியக் கோயில் விதிகள்

கோயில்களில் நடைபெறும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சி இரண்டு நாட்கள் வரை இருக்கும். ஆனால் தொடர்ந்து வில்லுப்பாட்டு நிகழ்ச்சி நடைபெறாது. அச்சமயங்களில் வில்லுப்பாட்டுக் கலைஞர்கள் ஓய்வாகவே காணப்படுவர். சில பிரபலமடைந்த வில்லுப்பாட்டுக் கலைஞர்கள் அச்சமயங்களைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு, வேறு கோயில்களுக்கு வில்லுப்பாட்டு நிகழ்த்தச் சென்றுவிடுவர். ஆனால் அவர்கள் எங்கு சென்றாலும் முதலில் பாடிக் கொண்டிருக்கும் கோயிலை விட்டு வில்லுப்பாட்டுக் கருவிகளைக் கொண்டு செல்ல முடியாது. ஒரு கோயிலில் பாடிக் கொண்டிருக்கும் போது அக்கலைஞர்கள், தாம் பயன்படுத்தும் இசைக் கருவிகளை, வில்லுப்பாட்டு நிகழ்ச்சி முற்றிலும் முடிந்த பின்னரே எடுத்துச் செல்ல வேண்டும் என்பது கோயில் விதியாகக் கொள்ளப்படுகிறது. இதனையே எல்லா வில்லுப்பாட்டுக் கலைஞர்களும் பின்பற்றுகின்றனர்.

## விரும்பும் கதையினைப் பாடுதல்

கோயில்களில் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியின் போது பல்வேறு புராணக்கதைக ளையும், தெய்வக்கதைகளையும் பாடுகின்றனர். மேலும் வில்லிசைக் கலைஞர் சாமியாட்டம் முடிந்த பிறகு, மிதமுள்ள நேரங்களில் மக்களை மகிழ்விப்பதற்காக புராணத் தன்மைக் கொண்டு, புராணமாக அமையும் கதைகளையும், புராணத்தன்மைக் கொண்டு புராணமாக அமையாத கதைகளையும், சிறு தெய்வங்களைப் பற்றிய வரலாற்றுக் கதைகளையும் பாடுவர்.

## கலைஞரின் மனஓட்டம்

கோயில்களில் நிகழ்த்தும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளில், கலைஞர் தனது மனதில் தோன்றும் எண்ணங்களையும், நகைச்சுவைத் துணுக்குகளையும், கேலியான கிண்டலான வார்த்தைகள் மற்றும் சமூகத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளையும் தான் பாடும் கதையினில் இணைத்தும், ஒப்புமைப்படுத்தியும் கூறுவது உண்டு. மேலும் காலநேரம் அதிகமாகக் காணப்படுவதால், வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளில் இப்பண்பு களை அதிக அளவில் இணைத்து, சுவைஞர்களை மகிழ்விப்பதும், பாடலைக் கேட்கத் தூண்டுவதும் பெரும்பாலும் காணப்படுகிறது.

## மக்களின் கவனத்தை ஈர்த்தல்

கோயில்களில் நிகழ்த்தப்படும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளில் பத்தியுணர்வே மேலோங்கித் திகழும். மேலும் மக்களின் கவனம் சிதைவுறும் போதும், கவனிக்காமல் சோர்வுறும் போதும், மக்களின் கவனத்தை ஈர்க்கவும், உற்சாகப்படுத்தவும் வில்லுப்பாட்டுக் கலைஞர்கள் பக்திப்பாடல்களைப் பாடியும், நகைச் சுவைத் துணுக்குகளை கூறியும், கவனத்தை ஈர்ப்பர். மேலும் விடுகதை, பழமொழி, அடுக்குத்தொடர், அணிகள் போன்றவற்றை சொல்நயத்துடன் கூறியும் மக்களின் கவனத்தை ஈர்க்கின்றனர். சுவைஞர்களாகிய மக்களின் குறிப்பறிந்து வில்லுப்பாட்டுக் கலைஞர்கள் நிகழ்ச்சியினை நடத்திச் செல்வது சிறப்பை அளிக்கிறது.

## அன்பளிப்பு

வில்லுப்பாட்டு நிகழ்ச்சியில் வில்லிசைக் கலைஞர்களின் தனிச்சிறப்பைப் போற்றும் வகையில் அவர்கள் பாடும்போது சுவைஞர்கள் விரும்பி, தங்களுக்கு உடைமையா உள்ளப்பொருட்களில் ஏதேனும் ஒன்றை அதாவது பணம், பூமாலை, பணமாலை, அங்கவஸ்திரம் போன்ற வற்றைப் பரிசாகக் கொடுப்பர். மேலும் அன்பளிப்பை 'மொய்வைத்துச் சிறப்பித்தல்' என்றும் கூறுவர்.

இவ்வாறு சுவைஞர்கள் விரும்பிக் கொடுத்தால், அவர்களைப் பற்றி வில்லிசைப் புலவனும் விரும்பிப் புகழ்ந்துப் பாடுவான். சான்றாக வில்லிசைப்புலவர், சுவைஞர் ஒருவர் பரிசுக் கொடுத்ததைச் சிறப்பிக்கும் வகையில் ஒரு பாடல் பாடுகின்றார்.

"ஆலது போல் தான் தழைத்து

அருகது போல் வேரூன்றி

மூங்கில் போலே அன்னசுற்றம்

முசியாமல் வாழ வேண்டும்

பால் போலே பொங்கி

பவுசாக வாழ வேண்டும்!"

என்று பாடுகின்றான். மேலும் சில சுவைஞர்கள் புதுமாலையை, பாமாலைத்தந்த வில்விசைப் புலவனுக்குச் சென்று சூட்டுவர். அதனை வில்லிசைப்புலவனும் ஏற்று, அவர்களைப் புகழ்ந்துப்

பாடுவான் (Informer – Rajkumar, Age 57). அதாவது பாடிக் கொண்டிருக்கின்றப் புலவரின் வில்லிசைக் குழுவினரைப் பாராட்டி, பூமாலை எங்களுக்கு அன்பளிப்பாக அளித்துள்ள பெருமகனார் அவர்கள்,

"எத்திக்கும் புகழ்மணக்க

தித்திக்க வாழ்க! வாழ்க!

பூமாலை சூட்டியவன் நாளும்

பொலிவு பெற்று வாழ்க"

என்று பாடுகிறான் (Informer – Rajkumar, Age 57). இவ்வாறு வில்லுப்பாட்டு நிகழ்ச்சியில் யார் வேண்டு மானாலும், வில்லுப்பாட்டுக் கலைஞர்களுக்குப் பரிசுக் கொடுக்கலாம். பரிசுக் கொடுத்தவர்களைப் பற்றி வில்லுப்பாட்டுக் கலைஞர்கள் பாராட்டி, நிகழ்ச்சியில் பாடுவர்.

## முடிவுரை

ஆண்டுதோறும் நடத்தப்படும் கோயில் திருவிழாக்களின் போது வில்லுப்பாட்டு நிகழ்ச்சியானது முக்கியப் பங்கை வகிக்கிறது. இத்தகைய வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகள் சிறுதெய்வங்களுக்கென்றே நடைபெறு கிறது. கோயில் திருவிழாக்களில் முதலில் கொடைவிழாவும், பலியிடுதலும், விளக்கு வழிபாடும் நடைபெறும். கொடைவிழாவில் தெய்வங்களுக்கென்று பலியிடுவதற்காக கிடாக்கள், ஆண் பன்றிகள், சேவல் கோழிகள் முதலியவற்றை கொடையாக மக்கள் கொடுப்பர். மேலும் விளக்கு வழிபாட்டில் மக்கள் வேண்டுதல்களையும், நேர்ச்சை களையும் நெய்விளக்கு, மாவிளக்கு, எலுமிச்சை விளக்கு போன்றவற்றின் மூலம் தீர்த்துக் கொள்வர். விளக்கு வழிபாடு நிறைவு பெறும் போது, வில்லிசைக் கலைஞர்கள் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியைத் தொடங்குவர். அப்போது அவர்கள் கோயில்களில் அமைத்திருக்கின்ற விழா மேடையில், பிள்ளையார் உருவத்துக்கு முதலில் வழிபாடு செய்வர். பின்னர் இசைக் கருவிகளுக்கும் பூசை செய்து, நிகழ்ச்சி நன்முறையில் நடைபெற கடவுள் வணக்கம், காப்பு போன்றவற்றை முறையே பாடித் தொடங்குவர். கடவுள் வணக்கம், காப்பு, வருபொருள் உரைத்தல், அலங்காரம், குருவணக்கம் முதலியவை செய்யுள் பாட்டாகவே அமையும். இதனை உரைக்கூறி விளக்குதல் ஒருபோதும் இல்லை. ஏனெனில், இவையனைத் தையும் தன் மனநிறைவுக்காக வில்லிசைப் புலவன் பாடுகின்றான். இதனைச் சுவைஞர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்ப தில்லை. ஆனால் எளிய நடையில், செய்யுள் பிறழாமல் வணக்கத்திற் குரியப் பாட்டுக்களை வடிவமைத்துப் பாடுவது ஒவ்வொரு வில்லிசைப் புலவனுக்குரிய தனிச்சிறப்பாகும். அவையடக்கத்திற்குப் பின்னரே கலைஞர் அறிமுகம் நடைபெறும். அப்போது வில்லிசைப் புலவர்கள் சிலர் தம்மைப் பற்றியும், தம்முடன் பாட வந்திருக்கும் மற்ற எல்லாக் கலைஞர்களின் சிறப்பைப் பற்றியும் எடுத்துக் கூறுவர். கலைஞர் அறிமுகம் முடிந்ததும் பாடும் களத்தைப் பாடுவர். பின்னர் வில்லுப்பாட்டு நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற சிவனையும் பார்வதியையும் வேண்டுவர். இது கயிலைக்காட்சி யாகப் பாடப்படுகிறது. இவை முடிந்ததும், சாஸ்தா வரலாறு பாடத் துவங்கி விடுவர். சாஸ்தா வரலாறு, கண்ணன் பிறப்பு, அரிகர சுந்தர ஐயப்பனை பற்றியதாக இருக்கும். இது கட்டாயமாக கோயில்களில் நடக்கும் வில்லுப்பாட்டு நிகழ்வின் போது நடைபெறும். சாஸ்தா முடிந்ததும் கோயில்களில் காணப்படும் சிறுதெய்வங்களைப் பற்றிய ஏதேனும் ஒரு ஏட்டுக்கதைப் பாடப்படும். இது முழுவதும் பாட்டு வடிவிலேயே இருக்கும். மேலும் நிகழ்ச்சியின் போது எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல், வில்லிசைப் புலவரிடம் ஏட்டுக்கதையைப் பாடக் கொடுப்பதால், அவ் ஏட்டுக்கதைப் பாடுவதின் மூலமாக வில்லிசைப் புலவரின் கலைத் திறத்தை அறிய முடிகிறது. ஏட்டுக்கதைப் பாடி முடிந்தப் பின்னரே கேள்விக் கதைப் பாடப்படும். கேள்விக் கதையானது மக்களுக்கு ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அமைந்திருக்கும். மேலும் பொழுதை இனிமையாகக் கழிப்பதற்கும், இத்தகைய கேள்விக்கதைப் பாடப்படுகிறது. கேள்விக் கதை இன்பியல் முடிவுகளையும், துன்பியல் முடிவுகளையும் கொண்டு முடியும். இதன் பின்னர் வரக்கூடியது துடுக்குச்சீர் ஆகும். துடுக்குசீரைப் பாடுவதன் நோக்கமே சாமியாடிகள் ஆடவிரும்பும் போது, அவர்களுக்கு ஆவேசம் வரவழைக்கப் பாடப்படுவது ஆகும். சாமியாடி மூலம் அருள்வாக்குக் கூறிவிட்டு, தெய்வம் மனித உடலிலிருந்து

நீங்குதல் மலையேறுதல் ஆகும். இதன் மூலமாக துடுக்குச் சீரானது நிறைவுக்கு வந்து விடும். வில்லுப்பாட்டு நிகழ்ச்சியின் இறுதியாக மங்களம் பாடப்படும். மங்களம். பாடுதலை வாழிப்பாட்டு என்று கூறுவர். மங்களம் பாடும்போது எல்லா தெய்வங்களையும் போற்றிப்பாடுதல் மரபாகும். மேலும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிக்கு ஒழுங்கு செய்தோர் மற்றும் வில்லுப்பாட்டுக் கலைஞர்கள் ஆகியோரைப் பற்றியும், வாழ்த்திப் பாடி நிகழ்ச்சியை நிறைவு செய்வர். வில்லுப்பாட்டு நிகழ்ச்சியில் சுவைஞர்கள், வில்லுப்பாட்டுக் காரர்களை ஊக்குவிக்கும் வகையில் பரிசுப்பொருட்களை பணமாகவோ, பூமாலையாகவோ, அங்கவஸ்திரமாகவோ, விழா நடைபெறும் மேடையிலேயே வில்லிசைக் கலைஞர்களிடம் அன்பளிப்பாகச் சென்று கொடுப்பர். இதனை அவர்களும் விரும்பிப் பெற்று சுவைஞர்களைப் புகழ்ந்துப் பாடுகின்றனர். அன்பளிப்பை மொய் வைத்துச் சிறப்பித்தல் என்றும் கூறுவர். இவ்வாறு வில்லுப்பாட்டு நிகழ்த்தும் முறையானது பல்வேறு கோணங்களில் ஆராயப்பட்டுள்ளது.

## References


Gomathinayagam, T.C., (2007) Tamil Villupattukal, Tamilpathippagam, Chennai, India.

Jayam, A., Chandralekha Vaidyanathan, (2016) Tamizh Ilakkiya Varalaru, Janaka Publishing House, Chennai, India.

Lourdu, D., (2000) Naataar Vazhakatrial Sila Adipadaigal, Naataar Vazhakatrial Aaivu Maiyam, Palaiyangkottai, India.

Muthuswamy, (1995) Sastha Villupadal, Dimond Press, Thakalai, India.

Shanmugasundaram, S., (2007) Tamil Nattupura Padalgal, Kavya Publishing House, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License